மதுரை மாவட்டம் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு வருகிற 14ஆம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு கால்கோள் விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உடன் பங்கேற்றனர்.



## சென்னை உள்ளிட்ட 16 மாநகராட்சிகள் விரிவாக்கம்

# கன்னியாகுமரி உள்ளிட்ட புதிய 13 நகராட்சிகள் உருவாக்கம்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

**சென்னை, ஜன.3-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையின் பேரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் எல்லைகள் விரிவாக்கம் மற்றும் புதிய நகராட்சிகள், பேரூராட்சிகள் அமைத்துருவாக்கம் தொடர்பாக ஐந்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.**

தமிழ்நாடு நகரமயமாதலில் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதமாகவும் தற்போது நகர்ப்புரங்களில் வாழும் மக்கள் தொகை சதவீதம் மேலும் உயர்ந்துள்ளது. எனவே, மாநிலத்தின் மிக வேகமான நகரமயமாக்கலை கருத்திற்கொண்டு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் எழுகின்றது.

மாநகராட்சிகள், நகராட்சிகள் போன்ற பெரியளவிலான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைச் சுற்றி அமைந்துள்ள ஊராட்சிகள் / பேரூராட்சிகள் போன்றவை நகரங்களின் / பெருநகரங்களின் நுழைவாயிலாக அமைந்துள்ளதுடன், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள் பலவும் இவற்றில் அமைந்துள்ளன. இப்பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் ஏராளமானோர் அருகிலுள்ள நகர்ப்புர பகுதிகளிலும், அதனைச் சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் குடியிருந்து வருகின்றனர். மேற்கண்ட பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு அவசியமாகிறது. இதன் மூலம் தொடர்புடைய பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும், மாநகராட்சி / நகராட்சி/ பேரூராட்சிகளின் எல்லைகளை சுற்றி அமைந்துள்ள பெரும்பாலான ஊரகப்பகுதிகள் நகர்ப்புர பகுதிகளுக்கு சமமாக வளர்ந்து வருகின்றன. எனவே நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை சுற்றி அமைந்துள்ள பகுதிகளுக்கும், நகர்ப்புரங்களுக்கு இணையான வகையில் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, பொது/சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

இவற்றோடு, வேகமாக நகரமயமாகிவரும்/வளர்ச்சியடைந்து வரும் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி மற்றும் இடப்பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்றுதல் உள்ளிட்ட மக்களுக்கான அடிப்படை வசதிப் பணிகள்/ சேவைகளுக்கான விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்கான பொறியாளர்கள் உள்ளிட்ட தேவையான பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளது போன்றவற்றைகளையவும் உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு அவசியமாகிறது.

இதன்மூலம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுடன் இணை க்கப்படும் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் மக்களுக்கு கிடைக்க ஏதுவாகும். இம்மேம்பாட்டினால், பொரு ளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் ஏதுவாகும்.

அரசு, நகரமயமாக்கலின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், நகர்ப்புரத்தினை ஒட்டியுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நகரமயமாக்கலின் தன்மையினை பொறுத்து, கிராம ஊராட்சிகளை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைத்தும், பேரூ ராட்சிகளை நகராட்சிகளாகவும், நகராட்சிகளை மாநகராட்சிகளாகவும் தரம் உயர்த்துதல்/மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இதன்ப டி, கடந்த 2021 ஆம் ஆண்டு 6 புதிய மாநகராட்சிகள் மற்றும் 28 நகராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதே போன்று, 10.08.2024 அன்று திருவண்ணாமலை, நாமக்கல், காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாநகராட்சிகள் அருகிலுள்ள 2 பேரூராட்சிகள் மற்றும் 46 ஊராட்சிகளை இணைத்து, அனைத்து சட்ட நடைமுறைகளை பின்பற்றி மாநகராட்சிகளாக அமைத்துருவாக்கியுள்ளது. மேலும், 12.08. 2024 அன்று மாமல்லபுரம், திருப்பெரு ம்புதூர் மற்றும் திருவையாறு ஆகிய பேரூராட்சிகளை நகராட்சியாக அமைத்துருவாக்க உத்தேசமுடிவினை அறிவித்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**மறு சீரமைப்பு!**

இந்நிலையில், அரசு, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்பட வும், முழுஅளவிலும் வழங்குதல் (comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தகுதியான மேலும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளின் மறு சீரமைப்பை மேற்கொள்வதென முடிவு செய்துள்ளது.

தற்போது, 28 மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலம் வரும் 05.01. 2025ஆம் தேதியன்று நிறைவடைகிறது. இந்த மாவட்டங்களில் உள்ள நகர்ப்புரத் தன்மை வாய்ந்த ஊராட்சிகளை அருகிலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகளுடன் இணைக்கவும். பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளை இணைத்து நகராட்சியாக அமைத்துருவாக்கம் செய்திடவும் உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு தொடர்பான உயர்நிலைக் குழு, மாவட்ட ஆட்சியர்களுடன் மேற்கொண்ட தொடர் ஆலோசனைகளின் அடிப்படையில், உரிய செயற்குறிப்புகள் பெறப்பட்டுள்ளன.

அரசு, இச்செயற்குறிப்புகளை பரிசீலித்து, பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரை, திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட 16 மாநகராட்சிகளுடன், 4 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 149 ஊராட்சிகளை இணைக்கவும், திருவாரூர், திருவள்ளூர், சிதம்பரம் உள்ளிட்ட 41 நகராட்சிகளுடன் 147 ஊராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியை இணைக்கவும், பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளை இணைத்தும், தனித்தும் கன்னியாகுமரி, அரூர், பெருந்துறை உள்ளிட்ட புதிதாக 13 நகராட்சிகளை அமைத்துருவாக்கவும், கிராம ஊராட்சிகளை இணைத்து மற்றும் தனியாகவும் ஏற்காடு, காளையார்கோவில், திருமயம் உள்ளிட்ட புதிதாக 25 பேரூராட்சிகளை அமைத்துருவாக்கவும், 29 கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளுடன் இணைக்கவும் உத்தேச முடிவினை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக தக்க சட்டவகை முறைகளின் கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டு, உரிய நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**இடஞ்சார்ந்த திட்டமிடல்!**


இந்நடவடிக்கையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான தரமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அளித்திடும் நோக்கத்தை சிறப்பான முறையில் எய்திடும் வகையில், தொடர்ச்சியாக அமைந்துள்ள பகுதிகளை (contiguous areas) ஒருங்கிணைத்து, நிதி ஆதாரங்கள் உள்ளிட்ட வளர்ச்சிக்கான அனைத்து ஆதாரங்களும் சரியான அளவில் பயன்படுத்தப்படும் வகையில் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான ஒட்டுமொத்த திட்டமிடுதலை மேற்கொள்ளவும், இடஞ்சார்ந்த திட்டமிடல் (spatial planning) உள்ளிட்ட பல்வேறு காரணிகளை ஒருங்கிணைத்தல் / திறம்பட செயலாக்குதல் மூலம் திட்டமிடப்பட்ட நகர்ப்புர வளர்ச்சியை நெறிமுறைப்படுத்தவும் ஏதுவாகும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் ஐந்து அரசாணைகளை வெளியிட்டுள்ளது. இவ்வரசாணைகள் தமிழ்நாடு அரசின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

அரசு, நகரமயமாக்கலின் சவால்களை திறம்பட எதிர்கொள்ளும் வகையில், சீரான நகர்ப்புர வளர்ச்சி, செம்மையான நிருவாகம் ஆகியவற்றை உறுதிசெய்ய தேவையான இது போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்து வரும் ஆட்சியும் ஆதவனின் ஆட்சியே!



என்னருமைத் தமிழர்களே !
இனிதான புத்தாண்டைப்
பொன்னாக வரவேற்போம் !
புதுமைகள் படைத்திடுவோம் !

உழைப்பதில் மகிழ்ந்துபிறர்
உழைத்திடச் செய்திடுவோம் !
உழைப்புதரும் ஊதியத்தில்
உறவெல்லாம் காத்திடுவோம் !

கண்மைபோல் மறைந்திடுமே
கருத்தினிலே பொய்சேர்ந்தால்
உண்மையே பேசிடுவோம் !
உண்மைபேச உணர்த்திடுவோம் !

வேதங்கள் கூறுவதை
விலக்கிடுவோம் ! வள்ளுவன் சொல்
வேதமெனக் கொண்டேநாம்
வாழ்வினிலே வென்றிடுவோம் !

நஞ்சுக்கும் மதுவிற்கும்
நனிசிறிதும் வேற்றுமைஇல் !
நஞ்சுண்டார் துஞ்சினாராய்
நவின்றுள்ளார் வள்ளுவனார் !

நெஞ்சத்தின் அன்பையெலாம்
கொஞ்சமுமே மிஞ்சாமல்
கொஞ்சியதம் பிள்ளைகளின்
கல்விநலம் எதிர்பார்த்துக்

காத்திருக்கும் பெற்றோரைக்
கவலையிலே தள்ளிவிட்டு
மூத்தோர்சொல் விட்டுவிட்டு
முந்திப்போய்க் குடித்துவிட்டு

மாய்கின்ற இளையோரை
மீட்பதற்குப் புத்தாண்டை
பாய்ந்தேநீ வாவென்று
பரிவோடு வரவேற்போம் !

ஏழைகளின் நலம் காத்து
எளியோரின் துயர்தீர்த்து
வாழையடி வாழையாய்
வளர்கின்ற இளைஞரின்

கல்விநலம் வளர்ப்பதுடன்
கடல்தாண்டி மலைதாண்டி
பல்வேறு நாடுகளில்
பலதொழில்கள் வளர்த்துள்ள

செல்வர்களை முதலீடு
செய்கின்ற முகவோரை
நல்விதமாய் அணுகிதமிழ்
நாட்டிலே தொழில்வளர்க்க

வருகவென வரவேற்று
ஒப்பந்தம் பலசெய்து
பெருகிவரும் வேலைகளை
இளைஞர்க்குத் தருகின்ற

வீரமகன் ! வெற்றிகளைக்
குவிக்கின்ற தீரமகன் !
யாருமிவர்க் கிணையில்லை
இல்லைஇந்த நாட்டிலென

எல்லோரும் சொல்லுகின்ற
திராவிடத்தின் திருமகன் !
எல்லோர்க்கும் எல்லாமெனும்
தத்துவமே எம்கொள்கை !

சாதிமதம் இல்லாத
சமத்துவம் என் பாதையெனும்
நீதி மகன் ! நெஞ்சத்தால்
நெகிழாத எஃகாவான் !

ஒரேநாடு ஒரேமொழி
ஒரேநாடு ஒரேமதம்
ஒரேநாடு ஒரே தேர்தல்
என்போரை எதிர்க்கின்ற

ஒரே தலைவன் ஊறுசெயும்
எதிரிகளை அஞ்சாமல்
நேருக்கு நேர்நின்று
விரட்டிடும் வெற்றிமகன் !

**புலவர் முத்து.வாவாசி**



காற்றெங்கும் பரவுதல்போல்
கடலலைகள் பெருகுதல்போல்
ஊற்றெடுக்கும் அன்பாலே
உணர்வெல்லாம் பொங்குதல்போல்

ஆட்சிக்குப் பெருகிவரும்
ஆதரவால் அடுத்துவரும்
ஆட்சியும் ஆதவனின்
ஆட்சியே எனவுரைத்துப்

புத்தாண்டே வருகதமிழ்ப்
புத்தாண்டும் பொங்கலும்
மொத்தமாய் வந்துதமிழ்
மக்களுக்கு வாழ்த்துநல்க

வருகவே வருகவே
புத்தாண்டே வருகவே
வரவேற்று மகிழ்கிறோம் !
புத்தாண்டே வருகவே !

## முதல்வர் திறந்து வைத்த திருவள்ளுவர் அரிய புகைப்படக் காட்சி!

# ஜன. 5 ஆம் தேதி வரை பொதுமக்கள் இலவசமாகப் பார்வையிடலாம்!

## மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!

சென்னை, டிச. 3 -

முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவள்ளுவர் தொடர்பான அரிய புகைப்படங்கள், ஓலைச்சுவடிகள், பழமையான திருக்குறள் உரைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியினை வரும் 05.01.2025 வரை இலவச அனுமதியுடன் பொதுமக்கள் கண்டு களிக்கலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர். அழகுமீனா அறிவித்துள்ளார்.

இது குறித்து அச்செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழாவையொட்டி நடைபெற்ற விழாவில் இந்தியாவிலே முதல்முறையாக கடல் நடுவே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை கூண்டு பாலத்தையும், திருவள்ளுவர் சிலைக்கான லேசர் ஒளி விளக்குகளையும் 30-12-2024 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும் 22 தமிழ் அறிஞர்களுக்கு தகைசால் விருதுகளையும் அன்று நடைபெற்ற விழாவில் வழங்கினார்கள். மேலும் பட்டிமன்றம், கருத்தரங்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலர் உட்பட அனைத்து துறை செயலர்கள் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழாவை சிறப்பித்தார்கள்.

அதில் முக்கிய நிகழ்வாக செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பாக கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகை நுழைவு வாயிலில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் புகைப்பட கண்காட்சி அரங்கையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இப்புகைப்பட கண்காட்சி அரங்கில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட அரிய வகை புகை ப்படங்கள், திருவள்ளுவர் எழுதிய திருக்குறள்களை ஒரே திரைச்சீலையில் அச்சிடப்பட்டதும், முதன்முதலாக 1812ல் வெளிவந்த திருக்குறள் புத்தகம் மற்றும் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் அவர்களின் ஓலைச்சுவடிகளும், பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட அரியவகை திருக்குறள் நூல்கள் மற்றும் உரைகள் இப்புகைப்பட கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

புகைப்பட கண்காட்சி கன்னியாகுமரிக்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் திருவள்ளுவர் குறித்தும், திருக்குறள் குறித்தும், உரைகள் குறித்தும் அரிய விஷயங்களை தெரிந்து கொள்ளும் வகையில் கியூ.ஆர் (Q R) கோடு வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள இப்புகைப்பட கண்காட்சியை 5.1.2025 அன்று வரை காலை 8:00 மணி முதல் மாலை 8:00 மணி வரை கண்டு களிக்கலாம். அனுமதி இலவசம்.

உலகப்பொதுமறையாம் திருக்குறளை தந்த திருவள்ளுவரின் புகழை ஓங்கி உயர்ந்து பறைசாற்றும் அளவில் அமைக்கப்பட்டுள்ள இப்புகைப்பட கண்காட்சியை அனைத்து சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கண்டுகளித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.



தி.மு.க சட்டத் துறையின் தென் மண்டலத்திற்குட்பட்ட தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட, மாநகர வழக்கறிஞரனி ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கில் 28.12.2024 காலை 10.00 மணியளவில் சட்டத்துறை இணைச்செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ம.குபேர் இளம்பரிதி மற்றும் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.பி.செல்வக்குமார், சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜா முகம்மது, தலைமைக் கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் நகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கழக சட்டத்துறையின் - தென் மண்டலத்திற்குட்பட்ட

# தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட - மாநகர வழக்கறிஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## கே.எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

தூத்துக்குடி, ஜன. 3 -

தி.மு.க சட்டத் துறையின் தென் மண்டலத்திற்குட்பட்ட தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட, மாநகர வழக்கறிஞரனி ஆலோசனைக் கூட்டம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சார் திருமதி.கீதா ஜீவன் மீனவளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால் நடைத்துறை அமைச்சர் அனிதா.ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் சட்டத் துறைச்செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் வழிகாட்டுதலின் படி தூத்துக்குடி வடக்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கில் 28.12.2024 காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ம.குபேர் இளம்பரிதி மற்றும் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.பி.செல்வக்குமார், சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜா முகம்மது தலைமை கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் நகராஜன், துணைத் தலைவர் அழகர்சாமி, துணை அமைப்பாளர்கள்; மகேந்திரக்குமார், ரா.ஜேசு ராஜா தயான், வெயில்முத்து, பிரபு, திருமதி.பாரதி, தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் கிஸ்ஸிங்கர், ஸ்டீபன் தாஸ், விஜி, சதீஸ்குமார் மாநகர வழக்கறிஞர் அணி தலைவர் நாகராஜபாபுதுணைத்தலைவர் டிரேசி பிரைட் துணை அமைப்பாளர்கள் அந்தோணி செல்வ திலக், அஜீத், ரூபராஜ், மணிகண்டன், பாலசுப்பிரமணியன் மற்றும் கழக வழக்கறிஞர் திரளாக கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் சட்டத் துறை இணைச்செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆலோசனைப்படி ஜனவரி மாதம் 18ம் தேதி நடைபெறும் மூன்றாவது சட்டத் துறை மாநில மாநாட்டிற்கு தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து அதிகபடியான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாநகரம், 28 வது வார்டில் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான இராசு சந்தோஷ் ஏற்பாட்டில் துப்புரவுத் தொழிலாளர்கள் 100 பேருக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, துணை மேயர் எம்.லியாகத் அலி, நகர அவைத் தலைவர் அ.ரத்தினம், பொதுக்குழு உறுப்பினர் என். சாத்தையா, மாநகர துணை செயலாளர் மா.மணிவேலன், மாவட்டப் பிரதிநிதி ஆ.ஜேம்ஸ், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கவிஞர் ஆ.மரிய எட்வின் உள்ளிட்ட அனைத்துக் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.